

அளவர்/உதவி வரைவாளர்

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Cuddalore
Date:2025.08.21 18:31:29

வரைவாளர் நிலை - III

மேற்பார்வையாளர்

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கடலூர் மாவட்டம்

SIZE-A2

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியம், தில்லைநாயகபுரம் கிராமம், சர்வே எண்: 67/2 -ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

(திட்டமில்லாப்பகுதி)

இணையதள விண்ணப்ப எண் :2UQZAC45/2025/TCP

அளவு : 1:400

வ

மனைப்பிரிவு எல்லை -

நிலையில் உள்ள சாலை -

உத்தேச சாலைகள் -

கோரிய மனைகளின் எண்ணிக்கை - 25

ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை - 22

பரப்பளவு விபரம்:

மனைப்பிரிவின் மெத்தப்பரப்பளவு	-	5050.00 ச.மீ (1.25 ஏக்கர்)
சாலையின் பரப்பளவு மூலைமுடக்கு உட்பட	-	1422.45 ச.மீ (0.35 ஏக்கர்)
மனையிடங்களின் மொத்தப்பரப்பு	-	3627.55 ச.மீ (0.90 ஏக்கர்)

பொது ஒதுக்கீடு: (உள்ளாட்சிக்கு தானமாக ஆவண எண்:2819/2025, நாள்:09/05/2025, மற்றும் பிழைத்திருத்தல் ஆவண எண்:4980/2025, நாள்:06/08/2025 வாயிலாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

(பூங்கா- நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ROC NO-4367/2019/BA-2 நாள்:05-02-2020-இன் படி பூங்கா ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய பரப்பளவிற்கு நிகரான வழிகாட்டு மதிப்பீட்டு தொகையினை மனுதாரரால் உரிய கணக்கில் (ROC NO. HH4MXHVW/2025 கோப்பு எண் மூலம்) செலுத்தப்பட்டுள்ளது.

உள்ளாட்சி உபயோக மனை	-	20.70 ச.மீ (0.57 %)
மின்வாரிய உபயோக மனை	-	19.88 ச.மீ (0.54 %)
உத்தேச சாலைகள்	-	1422.45 ச.மீ

கட்டிட வரம்பு	-	7.20 மீ மற்றும் 9.0மீ சாலைகளுக்கு	-	1.50 மீ
மூலை முடக்கு	-	7.2மீ முதல் 12.0மீ வரை சாலைகளுக்கு	-	1.5மீ x 1.5மீ

இணையதள கோப்பு எண்: HH4MXHVW/2025/TCP -ல் மனைப்பிரிவு அனுமதி ஒப்புதலுக்கான உரிய கட்டணங்கள் நாள்: 09/05/2025 மற்றும் 11/05/2025 அன்று இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள்-04.02.2019-ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
2. அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள்-31.01.2020-ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண்.181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள்-09.12.2020-ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவுக்கு ஊராட்சி இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடத்தினை எந்ததுறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதபட்டியல் மாவட்ட வருவாய்த்துறை அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத்துறை சட்ட பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
8. நீர் நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
9. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 60" x 40" அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
10. நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் அனுமதி செல்லதக்கதல்ல.
11. இம்மனைபிரிவிலிருந்து அருகில் உள்ள இடத்திற்கு செல்லும் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள மனப்பிரிவு சாலைகளின் குறுக்கே மனைப்பிவு சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருப்பின் அதனை அகற்றப்பட வேண்டும்.
12. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தரர் சாலை அமைக்கப்பட்டு (COMMISSIONER/UE) ஈணையாளர்/.யூனியன் பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
13. உத்தேச மனைப்பிரிவின் உள்ளே குறைந்த மற்றும் உயர் அழுத் மின்கம்பியாதை ஆகியன செல்லுமானால் அவைகளை சாலையின் போக்கிற்க்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

குறிப்பு: அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிக்கப்பட்டுள்ளது.

ம.வ/ந.ஊ.உ_.இ(க.மா) எண்: 122/2025

(ஏற்கெனவே இணையதள விண்ணப்ப எண்: HH4MXHVW/2025/TCP மூலம் ம.வ/ந.ஊ.உ_இ (க.மா) எண்:64/2025 நாள்:12/05/2025 என எண்ணிடப்பட்டு இணையதளம் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டதனை திருத்தி அளிக்கப்பட்ட ஒப்புதல்.)

உதவி இயக்குனர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கடலூர் மாவட்டம்.